முருகப்பெருமான் துணை

**மகான் பூனைக்கண்ணார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

17.10.2021, ஞாயிற்றுக்கிழமை

1. கருணை வடிவாக உலக மக்களுக்கு
காப்பு தருகின்ற ஞான தேசிகனே
ஆறுமுக அரங்கனே உன் பெருமை கூறி
அருளுவேன் துல்லிய ஆசி
2. ஆசிதனை பிலவ தரிவை திங்கள்
அறிவிக்க முப்பானோர்திகதி கதிர்வாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 31ம் நாள், 17.10.2021 ஞாயிற்றுக்கிழமை)
பேசிடுவேன் பூனைக்கண்ணார் யானும்
பேருலகம் பாதுகாப்புற உரைப்பேன்
3. உரைக்கவே ஞானம் தேடியே
உலகமெல்லாம் அலையும் மக்கள்
மறைபோற்றும் அரங்க ஞானியின்
மாதவபலம் அறிந்து வந்து
4. வந்துமே பிரணவக் குடிலில்
வாழும் ஞானி அரங்கனிடம்
எந்தவித அய்யமும் கொள்ளா
இடர்வெல்லும் ஞான தீட்சை
5. தீட்சை அடைந்து குருவே என
திடமுற சரணாகதி கொண்டு
தீட்சைபடி நித்ய பூசைகள்
தொடர்ந்து செய்து கொண்டு வர
6. வருகவே தேடி அலைகின்ற நிலை
வருமுலகில் தொடரா விலகி
குருவரங்கன் அருளாசி பலத்தால்
குறைவிலா செபதப பலத்தால்
7. பலத்தால் மனமாயை அகன்று
பந்தபாசம் கட்டுகள் விலகி
சலனம் வஞ்சம் சூழ்ச்சி அனுகா
சாதிக்கும் மனப்பான்மை பெருகி
8. பெருகியே தொண்டுள்ளம் எனும்
பேதம் கருதா ஞான சக்தியாய்
முருகப்பெருமான் அருள்தயவு
முழுமை ஞானமாகப் பரவி

9. பரவியே உள்ளம் தெளிவுபட
பரோபகார சிந்தை நிரம்பி
துறவி ஆறுமுக அரங்கன் சேவை
தூய ஞான சேவையாக மாறி

10. மாறியே அரங்கன் தருமபலம்
மக்களை காக்கும் தேற்றும்
பெரிய சூட்சும மகா சக்தியாக
பிரணவ சித்தியாக வந்துநன்கு

11. வந்துமே உலக மாற்றம்
வடிவேலன் அற்புதமாகவே
சிந்தை கலந்து சிறப்புற
சிவராஜ யோகியின் தலைமைக்கு வரும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–